**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | இந்து நாகரிகம் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ பகுதி I வினாத்தாள் 25 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

01. சிந்து நதி புதைபொருளாய்வாளார்களால் எப்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.
   1) கி.பி. 3250 – கி.மு 2750 வரை   2) கி.பி 3250 – கி.பி 5000 வரை்
   3) 1922 – 1930 வரை   4) கி.மு 2750 – 1500 வரை
   5) 1900 – 2000 வரை

02. "திரையீ வித்யா" என்பதற்குள் அடங்காத வேதம்
   1) இருக்கு   2) யசுர்   3) சாமம்   4) அதர்வணம்   5) சுருதி

03. வேதங்களின் இறுதிப்பகுதியாக அமைந்தது.
   1) சைவ சித்தாந்தம்   2) வேதாங்கம்   3) புராணம்
   4) ஆகமம்   5) உபநிடதம்

04. சுப தந்திரம் என சிறப்பிக்கப்படுவது.
   1) ஆகமம்   2) வேதம்   3) பிரம்ம சூத்திரம்
   4) உப நிடதம்   5) பகவத்கீதை

05. மகாபாரத சாந்திபருவத்திலே போதிக்கப்படுவது.
   1) ராஜ தர்மம், அரச தர்மம்   2) அரச உபாயம், மக்கள் ஒழுக்கம்
   3) வில்வித்தை, போர் கலை   4) தபோவன வாழ்வு, தர்மம்
   5) குருகுல மரபு, இல்லற வாழ்வு

06. கலை அரசியல் "மரபுகளை அதிகம்" கொண்டமைந்த புராணம்.
   1) கந்த புராணம்   2) மார்க்கண்டேய புராணம்   3) விஷ்ணுதர்மோத்திர புராணம்
   4) சூரிய புராணம்   5) பிரம்ம புராணம்

07. இந்து மத மறு மலர்ச்சியும் சமய நிலையில் திருப்பங்களும் புதுமைகளும் ஏற்பட காரணமாக இருந்த பல்லவர் மன்னன்
   1) நந்தி வர்மன்   2) நரசிம்ம வர்மம்   3) சிம்ம விஷ்ணு
   4) இராஜசிம்மன்   5) மகேந்திர வர்மன்

08. சங்கரபக்தன், ஆகமப்பிரியன் எனும் விருதுப் பெயர்களைக் கொண்டவன்.
   1) மகேந்திர வர்மன்   2) விஷ்ணு கோபன்   3) குமார விஷ்ணு
   4) நரசிம்ம வர்மன்   5) ஸ்கந்த வர்மன்

09. இஸ்லாமிய கருத்துக்களையும் உள்வாங்கி வைணவத்தை வளர்த்த வட நாட்டு பக்தி நெறியாளர்.
   1) மீராபாய்   2) கபீர்தாஸர்   3) துளசிதாசர்
   4) இராமானந்தர்   5) ஸ்ரீசைதண்யர்

10. இந்துக்களை ஒன்று திரட்ட "சங்கடனம்" என்ற இயக்கத்தை தாபித்தவர்.
1) சுவாமி தயானந்த சரஸ்வதி 2) ராஜாராம் மோகன்ராஜ் 3) சுவாமி விவேகானந்தர்
4) சுவாமி இராம கிருஷ்ணர் 5) ஆறுமுக நாவலர்

11. இலங்கை அரசு நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்ட வருடம்.
1) 1990 2) 1971 3) 1879 4) 2000 5) 1930

12. சுவாமி விபுலானந்தருக்கு "பிரபோத சைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டியவர்.
1) சைவப்புலவர் கா.அருணாசல தேசிகர் 2) சேர்.பொ.இராமநாதன்
3) கைலாசநாதக் குருக்கள் 4) சுவாமி விவேகானந்தர்
5) சுவாமி சிவானந்தர்

13. வேதம் வேறு தேவாரம் வேறு என்ற சர்ச்சைக்கு முடிவு கட்டியவர்.
1) அருணாசல தேசிகர் 2) ஆறுமுக நாவலர் 3) சுவாமி விபுலானந்தர்
4) காசிவாசி செந்திநாதையர் 5) சுவாமி விவேகானந்தர்

14. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற சோதிட நூல்
1) செக்ராச சேகரம் 2) இரகு வம்சம் 3) பரராச சேகரம்
4) கதிரை மலைப்பள்ளு 5) கைலாய மாலை

15. நாயன்மார்களால் புகழ்ந்து பாடப்பட்ட சிவ தலங்கள்.
1) நகுலேச்சரம், முன்னேச்சரம்
2) நல்லூர், மண்டூர்
3) திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்
4) கொக்கட்டிச்சோலை, ஒட்டு சுட்டான் சிவன் கோவில்
5) நல்லூர், கதிர்காமம்

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A** சமஸ்கிருத இலகு போதம் | **F** 2ம் சிவாலயம் | **K** சுருதி | **P** பெரிய திருக்கற்றளி |
| **B** சதுர்மறை | **G** வடமொழி இலக்கிய வரலாறு | **L** இந்து நாகரிக துறை முதல் பேராசிரியர் | **Q** ஜனநாத மங்களம் |
| **C** திருவிடையாட்டம் | **H** அறிவு | **M** வானவன் மாதேவீஸ்வரம் | **R** உற்சவம் |
| **D** கர்ஷணம் | **I** சததுர்வேதி மங்கலம் | **N** சிலாபரீட்சணம் | **S** ஆம்நயம் |
| **E** இராஜராஜேஸ்வரம் | **J** சிரௌதம் | **O** சங்கரபக்தன் | **T** வாழ்நாட்பேராசிரியர் |

16. கைலாச நாதக் குருக்களோடு தொடர்புடைய தொகுதி.
1) A, C, D, J 2) H, M, L, T 3) A, G, N, S 4) G, L, R, T 5) A, G, L, T

17. வேதத்தோடு தொடர்புடைய தொகுதி.
1) B, K, S, T 2) H, K, L, S 3) B, H, K, S 4) C, H, N, S 5) B, J, M, R

18. இராச சிம்மனோடு தொடர்புடைய தொகுதி.
   1) C, I, O, P   2) A, F, K, P   3) C, G, L, Q   4) C, F, O, P   5) D, I, N, S

19. சிவாகமங்களோடு தொடர்புடைய தொகுதி.
   1) E, J, N, R   2) B, J, N, S   3) A, G, L, S   4) D, J, N, R   5) C, J, M, R

20. பொலநறுவைக் கால இந்து பண்பாட்டோடு தொடர்புடைய தொகுதி.
   1) D, H, O, T   2) E, F, M, Q   3) C, I, K, P   4) B, J, K, O   5) A, I, O, S

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21. பிரம சமாஜத்தின் மூலம் ராஜாராம் மோகன்ராஜ் மேற்கொண்ட பணிகள்.
   1) 1815 இல் ஆத்மீக சபை தாபித்தமை.
   2) 1829 இல் உடன்கட்டை ஏறுவதற்கான தடைச் சட்டம்
   3) 1823 இல் பிராமணன் சஞ்சிகை வெளியிட்டமை.
   4) 1827 இல் வேதாந்தக் கல்வியை பரப்பியமை.
   5) 1840 இல் உருவ வழிபாட்டை எதிர்த்தமை.

22. சுவாமி விபுலானந்தர்
   1) 1892 பிறந்தார்.
   2) சுவாமி விவேகானந்தரினால் "பிரபோத சைதன்யர்" எனும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டார்.
   3) கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியர்
   4) தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
   5) மதங்கசூளாமணி எனும் நாடக நூலை இயற்றியவர்

23. சிந்து வெளிக் காலம்
   1) கி.மு. 3250 – கி.மு. 2750 வரையான காலமாகும்.
   2) 1922 தொடக்கம் 1930 வரையான காலத்தில் ஆய்வுக்குட்பட்டது.
   3) இந்து நாகரிகத்தின் முதல் இலக்கிய ஆதாரமாகும்.
   4) மொகஞ்சதரோ பாகிஸ்தானில் உள்ளது.
   5) சித்திர வடிவ எழுத்துக்கள் காணப்பட்டன.

24. வட இந்தியப்பக்தி நெறியாளர்களின் பொதுப் பண்புகள்.
   1) பக்தியை விடவும் கர்மம், ஞானம், கிரியை, சடங்கு மேலானது.
   2) வைணவத்தினை அடிப்படையாகக் கொண்டது.
   3) சமஸ்கிருத மொழியை விட்டுப் பாடுதல்.
   4) பக்தி மார்க்கம் மூலம் விடுதலை பெறலாம்.
   5) விஷ்ணுவை பரம்பொருளாகக் கொண்டமை

25. புராணங்கள்
   1) தெய்வங்களின் வரலாறுகளை கூறுவது.
   2) திருக்கோயில் வழிபாட்டு வழிமுறைகளை கூறுவது.
   3) பஞ்ச லட்சணங்களை விளக்குகின்றது.
   4) தெய்வீகப் பரத்துவத்தை விளக்குவது.
   5) சமயக் கருத்துக்களை கடினமாக கூறும் பாங்குடையது.

(25x4=100 புள்ளிகள்)

## பகுதி II

❖ பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக

## பகுதி I

01. இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) அக்கினி

ஆ) தர்மங்கள்

இ) வழிபாட்டு மரபுகள்

ஈ) வாழ்வியல்

(5+5+5+5=20 புள்ளிகள்)

02. பல்லவர் கால பக்தி மரபில் திருக்கோயில்கள் பெற்ற செல்வாக்கினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) மன்னர்களின் பங்களிப்பு

ஆ) கோயில்கள் வகைகள்

இ) வேதாகம மரபுகள்

ஈ) நாயன்மார்களின் பங்களிப்பு.

(5+5+5+5=20 புள்ளிகள்)

03. இலங்கையில் *19* ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்துப் பண்பாட்டு வளர்ச்சியினை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

அ) சைவ சமய நிறுவனங்களின் நோக்கம்

ஆ) சைவ பரிபாலன சபையின் கல்விப்பணிகள்

இ) சமய பெரியார்களின் பிரசங்கமும் கண்டனமும்

ஈ) ஆறுமுக நாவலரின் சமூகப் பணிகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளையும் சாதனைகளையும் ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. வட நாட்டு வைணவ பக்தி நெறியாளரான மீராபாயின் பங்களிப்பை விளக்குக.

(20 புள்ளிகள்)

06. கி.பி *9* ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி *15* ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி நிலையை பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

07. சிந்துவெளி கால சமய நிலை பற்றி விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. இந்து நாகரிக வரலாற்றில் புராணங்களின் முக்கியத்துவத்தினையும் சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளையும் எடுத்துக் கூறுக.

(20 புள்ளிகள்)